## திருப்புதல் பயிற்சித்தாள் - பத்தி படித்து விடையளித்தல்

**வகுப்பு – 10** **பாடம் - தமிழ்**

### 1. அறிவுடைமை

மனித இனத்திற்கு ஆண்டவன் வழங்கியுள்ள அருட்கொடைகளுள் தலையாயது அறிவு. மனிதனின் செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள் ஆற்றலின் வீச்சுகள் ஆகிய அனைத்துக்கும் ஆதாரமாய் அமைந்து அவனை இயக்கும் உந்து விசையாகப் பயன்படுவது அறிவு ஒன்றே! தொட்டனைத்தூறும் மணற்கேணியைப் போல் கற்க கற்க ஊறிப் பெருகுவது அறிவு. 'வெள்ளத்தால் அழியாது, வெந்தணலால் வேகாது' என்று புலவரால் போற்றப்படும் அறிவுச் செல்வம் என்றும் அழிவதே இல்லை. பிற செல்வங்கள் பிறருக்குக் கொடுத்தால் குறைந்து விடும். ஆனால் அறிவாகிய செல்வம் மட்டும் தான் பிறருக்குக் கொடுத்தாலும் குறையாது. ஒருவன் பிறருக்கு அறிவூட்டும் போது அவனது அறிவு மென்மேலும் சிறக்கிறது; தெளிவுபடுகிறது. பிற தானங்களை விடவும் 'வித்யா தானம்' சிறந்தது என்று அறிஞர்கள் புகழ்வது இதனால் தான்.

**வினாக்கள்**

i. ஆண்டவன் வழங்கியுள்ள அருட் கொடைகளுள் சிறந்தது -------------------

அ) அறிவு ஆ) அழகு இ) பொருள் ஈ) வலிமை

ii. ஒருவனது அறிவு எப்போது தெளிவு படும் ---------------------------------

அ) கற்கும் போது ஆ) கல்லாத போது

இ) பிறருக்கு கற்பிக்கும் போது ஈ) பிறர் போற்றும் போது

iii. தணல் என்ற சொல்லின் பொருள்

அ) தண்ணீர் ஆ) வெந்நீர் இ) காற்று ஈ) நெருப்பு

iv. தானங்களுள் சிறந்தது

அ) வித்யாதானம் ஆ) பொருள்தானம்

இ) கண்தானம் ஈ) இரத்த தானம்

v. மனிதனை இயக்கும் சக்தியாகப் பயன்படுவது

அ) பணம் ஆ) அறிவு இ) இளமை ஈ) அழகு

## 2. கலைகள்

நம் தமிழ் முன்னோர்கள் போற்றி வளர்த்த கலைகள் பலவாகும். அவற்றை நுண்கலைகள் என்றும் பிற கலைகள் என்றும் கூறுவர். நுண்கலைகள் என்ற பிரிவில் இசை, நாடகம், நடனம், ஓவியம் முதலானவை அடங்கும். முற்காலத்தில் அரண்மனைகள், மாளிகைகள், மண்டபங்கள் முதலிய இடங்களை ஓவியங்கள் அழகு செய்தன. சங்க காலத்திற்குப் பிறகு பல்லவர், சோழர், நாயக்க மன்னர்கள் ஆகியோர் காலத்திலும் ஓவியக் கலை சிறந்திருந்தது. திருப்பரங்குன்றத்து முருகவேள் கோவிலில் ஒரு சித்திரமாடம் இருந்ததாகப் பரிபாடல் கூறும். பல்லவர்கள் அமைத்த கற்கோயில்கள், குடைவரைக் கோயில்கள் முதலிய இடங்களில் அழகிய ஓவியங்களைத் தீட்டினர். அவர்கள் காலத்து ஓவியத்தின் உயர் நிலைக்குச் சான்றுகளை சித்தன்னவாசலில் இன்றும் காணலாம்.

**வினாக்கள்**

i. ஓவியம் என்பது

அ) சிற்பம் ஆ) சித்திரம் இ) நாடகம் ஈ) நடனம்

ii. திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன்

அ) திருமால் ஆ) பிரம்மா இ) முருகன் ஈ) சிவன்

iii. பல்லவர்களின் ஓவியக் கலைக்குச் சான்று பகர்வது

அ) ஓவியக் கூடம்

ஆ) சித்திர மாடம்

இ) சித்தன்ன வாசல் ஓவியங்கள்

ஈ) அஜந்தா எல்லோரா ஓவியங்கள்

iv. தீட்டினர் என்ற சொல்லின் பொருள்

அ) திட்டினர் ஆ) வரைந்தனர்

இ) பொறித்தனர் ஈ) கூர்மையாக்கினர்

v. குடைவரைக் கோவில் என்பது

அ) மலையின் மேல் கட்டப்பட்ட கோவில்

ஆ) மலை அடிவாரத்தில் கட்டப்பட்ட கோவில்

இ) மலையின் அருகே கட்டப்பட்ட கோவில்

ஈ) மலையைக் குடைந்து கட்டப்பட்ட கோவில்

## 3. பாண்டியர்கள்

பாண்டியர்கள் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்தே வாழ்ந்து வந்த தமிழ்ப் பழங்குடி மன்னர்கள் என்று திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் கூறியுள்ளர். ஆதி இதிகாசங்களான வடமொழி இராமாயணத்திலும் பாரதத்திலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இலங்கையின் பண்டைய வரலாற்றைக் கூறும் ‘மகாவமிசம்’ என்னும் நூல் கி.மு.478இல் இலங்கையை ஆண்ட தமிழ் வேந்தனான விசயன், ஒரு பாண்டிய மன்னன் மகளை மணந்ததாகக் கூறுகிறது. தமிழகத்தின் தென்பகுதியை ஆண்ட பாண்டியர்கள் மாற்றாரும் போற்றும் வண்ணம் ஆண்டனர்.

**வினாக்கள்**

i. திருக்குறளுக்கு உரையெழுதியவர்

அ) பாண்டியர் ஆ) பரிமேலழகர் இ) விசயன் ஈ) இளங்கோவடிகள்

ii. ஆதி இதிகாசங்கள்

அ) சிலப்பதிகாரம், மணிமேகலை

ஆ) இராமாயணம், மகாபாரதம்

இ) இராமாயணம், மணிமேகலை

ஈ) இராமாயணம், சிலப்பதிகாரம்

iii. இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன்

அ) நெடுஞ்செழியன் ஆ) கடுங்கோன் இ) விசயன் ஈ) பரிமேலழகர்

iv. பாண்டியர்கள் சிறப்புற ஆண்டது தமிழகத்தின்

அ) தென்பகுதி ஆ) வடபகுதி இ) கிழக்குப்பகுதி ஈ) மேற்குப்பகுதி

v. மன்னன் என்பதன் பொருள்

அ) மைந்தன் ஆ) களப்பிரர் இ) பாண்டியன் ஈ) வேந்தன்

## 4. கல்வி

நீர் நிறைந்த ஏரியைப் பறவைகள் நாடி வருவதைப் போன்று பண்டைத் தமிழகத்தில் தமிழின் சுவையை அறிந்த மன்னர்களைத் தேடி அறிஞர்கள் செல்வது இயல்பாக இருந்தது. தம்மை நாடி வந்த புலவர்களைத் தார் வேந்தரும் அகமகிழ்ந்து வரவேற்றனர். புலவர்களால் பாடப்படுவதை அவர்கள் பெறற்கரும் பேறாகக் கருதினர். அரியாசனத்திற்கு நிகரான சரியாசனம் தந்து, பற்பல பரிசில்களை அளித்து அச்சான்றோர்களைப் பெருமைப் படுத்தினர். அவர்களின் அறிவுறைகளைச் செவிமடுத்துக் கேட்டனர். அதன் விளைவாக அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர். இதனால் நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் பெருமதிப்பு ஏற்பட்டது. “கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே” என்ற முறையில் கல்வியின்பால் ஆர்வம் நிறைந்து வளர்ந்தது.

**வினாக்கள்**

i. பண்டைத் தமிழ் புலவர்கள் யாரை நாடிச் சென்றனர்?

அ) மன்னர்கள் ஆ) மக்கள் இ) புலவர்கள் ஈ) மாணவர்கள்

ii. தார்வேந்தர் அகமகிழ்ந்து வரவேற்பது

அ) பெரியோர்களை ஆ) புலவர்களை இ) மக்களை ஈ) வேந்தர்களை

iii. தார்வேந்தர்கள் புலவர்களிடமிருந்து கேட்டது

அ) அறிவுரை ஆ) தெளிவுரை இ) பதவுரை ஈ) விளக்கவுரை

iv. புலவர்களின் கூற்றினால் மன்னர்கள் நாட்டில்

அ) அறத்தை நிலை நாட்டினர்

ஆ) மக்களிடம் அறத்தை வலியுறித்தனர்

இ) அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர்

ஈ) பகையின்றி வாழக் கற்றுக் கொண்டனர்

v. நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் ஏற்பட்டது

அ) நன்மதிப்பு ஆ) பெருமதிப்பு இ) வரவேற்பு ஈ) பெருஞ்சிறப்பு

## 5. ஆரோக்கியம்

அகத்தை நல்ல எண்ணங்களால் தூய்மை செய்வது போலப் புறத்தை நீராலும் காற்றாலும் ஞாயிற்றொளியாலும் தூய்மை செய்தல் வேண்டும். நீரும் காற்றும் ஒளியும்

மனிதனை வளர்க்கும் இயற்கைத் தெய்வங்கள் ஆகும். ஊற்று நீரில் நாள்தோறும் காலையில் தலை முழுகல் வேண்டும். மூழ்குதற்குத் தண்ணீரே சால்புடைத்து. நரம்புகட்குத் திண்மையும் உரமும் ஊட்டும் நீர்மை தண்ணீருக்குண்டு. நறுந் தண்ணீர் கிடைக்காவிடில் வெந்நீரில் குளிப்பது நலம். வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குளிப்பது நலன் பயக்காது. நோயாளர், மெலியர், ஒரு சில மூளை உழைப்பாளர் முதலியோர் வெந்நீரில் மூழ்கல் நலமென்று சில மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். தண்ணீரினும் வெந்நீர் அழுக்கை விரைவில் போக்கும். ஆனால் தண்ணீரைப் போல் வெந்நீர் நரம்புகளுக்குத் திண்மை தராது.

**வினாக்கள்**

**i.** அகத்தை தூய்மை செய்வது

அ) இறைவன் அருள் ஆ) வழிபாடு

இ) பிறருக்கு நன்மை செய்தல் ஈ) நல்ல எண்ணங்கள்

**ii.** நீரும் காற்றும் வெளியும் மனிதனை வளர்க்கும்

அ) இயற்கைத் தெய்வங்கள் ஆ) பிரபஞ்சங்கள்

இ) மும்மூர்த்திகள் ஈ) இயற்கை அண்டங்கள்

**iii.** திண்மை என்பதன் பொருள்

அ) வலிமை ஆ) உரம் இ) சிறப்பு ஈ) பெருமை

**iv.** நீர்மை என்பதன் பொருள்

அ) நீரிலுள்ள மை ஆ) சூடு இ) மென்மை ஈ) இயல்பு

**v.** வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குளிப்பது

அ) நலம் பயக்கும் ஆ) நலம் பயக்காது

இ) தூய்மை பயக்கும் ஈ) தெள்வு பயக்கும்

## 6. கணவாய்

கடல்வாழ் உயிரினங்களில் கணவாய் என்பது ஒரு வகை. கணவாய்களுக்குக் கால்கள் தலையிலிருந்தே முளைத்திருக்கும். அதனால் இவற்றைத் தலைக்காலிகள் எனவும் அழைப்பர். கணவாயில் பலவகை உண்டு. ஒட்டுக் கணவாய், கூந்தற் கணவாய், பேய்க் கணவாய் என்பன அவை. கடற்கரையோரங்களிலும் கடலின் ஆழமான பகுதிகளிலும் அவை வாழ்கின்றன. கடற்பாறைகளிலும் ஊனத் திட்டுகளின்

இடையிலும் இவை காணப்படுகின்றன. கணவாயின் உடல் நுங்கைப் போல மிருதுவாக இருக்கும். கணவாய்க்கு எட்டு முதல் பத்து கால்கள் வரை உண்டு. கால்களின் நடுவில் இதன் வாய் அமைந்துள்ளது. வாயின் தாடைகள் கிளியின் மூக்கு போல அமைந்திருக்கும். கணவாய்கள் வேண்டும் போது தம் நிறத்தை மாற்றிக் கொள்ளும். இவை தம் உடம்பிலிருந்து 'செம்பியர்' என்ற மையைக் கக்குவதால் அவற்றைத் தின்ன வரும் விலங்குகள் மீது பட்டு அவை மோப்ப உணர்ச்சியற்றுப் போகும். இவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

**வினாக்கள்**

i. கணவாயின் வாய் எங்கு அமைந்துள்ளது?

அ) தலையில் ஆ) கழுத்தில் இ) வயிற்றில் ஈ) கால்களில்

ii. கணவாயின் உடல் எது போல் அமைந்துள்ளது?

அ) பூனையைப் போல் மென்மையாக ஆ) புறாவைப் போல் கருமையாக

இ) பஞ்சினைப் போல் மென்மையாக ஈ) நுங்கைப் போல் மிருதுவாக

iii. கணவாய்க்கு எத்தனை கால்கள் உண்டு?

அ) எட்டு ஆ) ஆறு முதல் எட்டு வரை

இ) பத்து ஈ) எட்டு முதல் பத்து வரை

iv. கணவாய்கள் தம் உடம்பிலிருந்து என்ன மையைக் கக்குகின்றன?

அ) மாப்பியர் ஆ) செம்பியர் இ) கெம்பியர் ஈ) லெம்பியர்

v. கணவாய்கள் எவ்வாறு இனவிருத்தி செய்கின்றன?

அ) குட்டி போட்டு ஆ) செம்பியார் என்னும் மையைக் கக்கி

இ) முட்டையிட்டிக் குஞ்சு பொரித்து ஈ) உடலின் நிறத்தை மாற்றி

## 7. சூரியகாந்தி

சூரியகாந்திப்பூ சூரியனை நோக்கித் திரும்புவதற்கு அந்தப்பூவில் உள்ள 'போட்டோட் ரோபிஸம்' என்ற இயக்கம் தான் காரணம். இந்த இயக்கத்திற்குச் சூரியனின் ஒளிக்கதிர் மிகவும் அவசியம். இதனால் இந்தப்பூ கிழக்கு, மேற்கு திசையைக் காட்டக் கூடியதாக உள்ளது. இதேபோல 'சில்பியம் லேசினியேட்டம்' என்ற செடியும் திசைகாட்டும் வேலை செய்கிறது. இந்தச்செடி வட ஆப்பிரிக்கா நாட்டில் வளர்கிறது.

ஆறு அடி உயரம் வரை இந்தச் செடி வளரும். தண்டுப்பகுதியில் கீழே அதிக இலைகளும் மேலே செல்லச்செல்ல இலைகள் குறைந்து கொண்டும் வரும். இலைகள் மொரமொரப்பாகவும் எதிர் எதிராகவும் இருக்கும். அவை வடக்கும் தெற்குமாகவே எப்போதும் இருக்கும். திசைகாட்டும் கருவியில் உள்ள காந்தமுள் வடக்கும் தெற்குமாக நின்று திசை காட்டுவதுபோல இந்த இலையும் காட்டுவதால் இந்தச் செடிக்கு காம்பஸ் என்ற பெயரும் உண்டு.

**வினாக்கள்**

i. சூரியகாந்திப்பூ சூரியனை நோக்கித்திரும்பக் காரணமாக இருப்பது எது?
   அ) காந்த இயக்கம் ஆ) இயற்கை நியதி
   இ) போட்டோட்ரோபிஸம் ஈ) நிலத்தின் தன்மை

ii. சில்பியம் லேசினியேட்டம் என்ற செடி எந்த நாட்டில் காணப்படுகிறது?
   அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) தென்னாப்பிரிக்கா ஈ) வடாஆப்பிரிக்கா

iii. சில்பியம் லேசினியேட்டம் செடி எவ்வளவு உயரம் வளரும்?
   அ) மூன்றடி ஆ) ஆறடி இ) ஐந்தடி ஈ) இரண்டடி

iv. சில்பியம் லேசினியேட்டம் செடியின் இலைகளின் தன்மை யாது?
   அ) மொரமொரப்பாகவும் எதிர் எதிராகவும் இருக்கும் ஆ) தடித்திருக்கும்
   இ) பசுமையும் மென்மையுமாக இருக்கும் ஈ) முள்ளுடன் விளங்கும்

v. சில்பியம் லேசினியேட்டம் செடிக்குரிய வேறு பெயர் யாது?
   அ) சூரியகாந்திச் செடி ஆ) போட்டோட்ரோபிஸம்
   இ) காம்பஸ் செடி ஈ) நச்சுச் செடி

## 8. சிற்றிலக்கியங்கள்

தமிழில் சிற்றிலக்கியம் தோன்றி வளர்ந்த வரலாற்றினை முன் வைக்கும் முனைவர் ந.வீ.ஜெயராமன் “ தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகிச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதமாகாவும், பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினாங்காம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது” என்று குறிப்பிடுகிறார்.

<u>வினாக்கள்</u>

i. தமிழில் தோன்றி வளர்ந்த இலக்கியம் எது?
அ) அறஇலக்கியம் ஆ) காப்பிய இலக்கணம்
இ) சங்கஇலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்

ii. சங்ககாலத்தில் முளைவிட்டது எது?
அ) ஆற்றுப்ப்டை ஆ) போர்ப்படை
இ) கல்விக்கொடை ஈ) பத்துப்படை

iii. ஐந்தாம் நூற்றாண்டில் துளிர்த்தது எது?
அ) அஜந்தா ஆ) அந்தாதி இ) முந்தாதி ஈ) ஆதியந்தம்

iv. கோவை எந்த நூற்றாண்டில் தோன்றியது?
அ) ஐந்தாம் நூற்றாண்டு ஆ) ஆறாம் நூற்றாண்டு
இ) ஏழாம் நூற்றாண்டு ஈ) எட்டாம் நூற்றாண்டு

v. குறவஞ்சி தோன்றிய நூற்றாண்டு எது?
அ) பதினெட்டு ஆ) பத்து இ) இருபது ஈ) ஒன்பது

## 9. கலைக் களஞ்சியம்

களஞ்சியம் என்பது தானியங்களைச் சேகரித்து வைக்கும் இடமாகும். குழந்தைகள் கலைக் களஞ்சியம் என்பது குழந்தைகளுக்குத் தேவையான பல்வேறு செய்திகளை ஒருங்கே சேர்த்து வைத்துள்ள நூலாகும். கலைக் களஞ்சியத்தைப் பயன்படுத்துவதால் குழந்தைகள் விரைவான அறிவு வளர்ச்சியையும், மொழி வளர்ச்சியையும் அடைவர். இக்கலைக் களஞ்சியம் குழந்தைகள் தாமே படித்து புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக அமைந்திருக்கும். அது பத்துத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. பத்தாவது தொகுதியின் இறுதியில் சொற்களின் அகரவரிசைப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கும்.

**வினாக்கள் :-**

i. களஞ்சியம் எனப்படுவது யாது?
அ) தானியங்களைச் சேகரித்தல் ஆ) உடைகளைச் சேகரித்தல்
இ) புத்தகங்களைச் சேகரித்தல் ஈ) செல்வம் சேகரித்தல்

ii. குழந்தைகள் கலைக் களஞ்சியம் ------------ வகையில் அமைந்திருக்கும்.
அ) எளிமையாக ஆ) அதிகமாக இ) குறைவாக ஈ) சிறியதாக

iii. குழந்தைகள் கலைக் களஞ்சியம் எத்தனைத் தொகுதிகளைக் கொண்டது.
அ) எட்டு ஆ) ஒன்பது இ) பத்து ஈ) ஆறு

iv. பத்தாவது தொகுதியின் இறுதியில் ----------- கொடுக்கப்பட்டிருக்கும்.
அ) எகர வரிசைப் பட்டியல் ஆ) அகர வரிசைப் பட்டியல்
இ) இகர வரிசைப் பட்டியல் ஈ) உகர வரிசைப் பட்டியல்

v. குழந்தைகள் கலைக் களஞ்சியத்தைப் பயன் படுத்துவதால் ------------- அடைவர்.

அ) அறிவு வளர்ச்சி ஆ) உடல் வளர்ச்சி

இ) மொழி வளர்ச்சி ஈ) உள்ள வளர்ச்சி

## 10. விசிறிவால் உள்ளான்

விமானங்களை மனிதன் உருவாக்கப் பறவைகளை மனிதன் கண்ட பிறகுதான் அறிவு விரிவடைந்தது. பறவைகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம். அவற்றில் ஒன்றுதான் விசிறிவால் உள்ளான் எனும் வகையாகும். விசிறிவால் உள்ளான் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தெற்குஆசியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது. இப்பறவைகள் 25 முதல் 27 செ.மீட்டர் நீளம் இருக்கும். சிறகை விரித்தால் 44 முதல் 47 செ.மீட்டர் இருக்கும். சிறிய குட்டையான கால்களுடன் விளங்கும் இப்பறவையின் அலகு மட்டும் 5.5 முதல் 7 செ.மீட்டர் வரை நீளமிருக்கும். இதன் வால் பகுதி விசிறி மடிப்பைப் போல் இருக்கும். அதுவே இதற்குப் பெயர்க் காரணமாயிற்று. உடல் முழுவதும் பழுப்பு நிறத்தில் வைக்கோல் நிறத்தில் வரிவரியாக இருக்கும். சேறும் சகதியும் மிகுந்த இடங்களில் இது வாழும். சேற்றைக் கிளறி அதிலுள்ள பூச்சிகளை உணவாகக் கொள்ளும். இப்பறவையின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதால் இது அரிய இனப் பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அழிந்து வரும் இத்தகைய பறவைகளின் இனம் அழியாது காக்கவேண்டியது நம் கடமையன்றோ!

**வினாக்கள் :-**

i. பறவைகள் சில அரிய இனமாக அறிவிக்கப்படுவது ஏன்?

அ) அவை அழகாக இருப்பதால்

ஆ) மிகுதியாகக் காணப்படுவதால்

இ) எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதால்

ஈ) மனிதர்கள் வளர்ப்பதால்

ii. விசிறிவால் உள்ளான் கால்கள் எப்படிப்பட்டவை?

அ) நீளமானவை ஆ) பருமனானவை

இ) ஒல்லியானவை ஈ) சிறிய குட்டையானவை

iii. விசிறிவால் உள்ளானின் உடல் முழுவதும் எவ்வாறு இருக்கும்?

அ) பச்சை நிறப்புள்ளிகளுடன்

ஆ) சிவப்பு நிறக் கோடுகளுடன்

இ) பழுப்பு நிறத்தில் வைக்கோல் நிறத்தில் வரிவரியாக

ஈ) வெண்மை நிறத்தில் காட்சித்தரும்

iv. விசிறிவால் உள்ளான் எங்கு வாழும்?

அ) சேறும் சகதியுமாக இருக்கும் இடத்தில் ஆ) மரப் பொந்துகளில்

இ) செடிகளுக்கிடையில் ஈ) வளைகளில்

v. விசிறிவால் உள்ளானின் வாழ்விடம் எந்நாடுகளில் உள்ளது?
அ) ஆஸ்திரேலியாக் கண்டத்தில் ஆ) அமெரிக்க கண்டத்தில்
இ) ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தெற்காசிய நாடுகளில் ஈ) கனடாவில்

## 11. நம்பிக்கை

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார் ? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், கெல்ன் கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத்திறனாளியரே. தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சினால், இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ருடால்ப் என்னும் பெண்மணி, தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும் கைவிடவில்லை. இடைவிடாத பயிற்சியும் துணிவும் கொண்டு விளங்கிய வில்மா, பதின்மூன்று வயதில் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொண்டாள். 1960ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்ற வில்மா ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப்பெற்றார். நம்பிக்கைதான் வாழ்வின் உயிர் நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம்.

**<u>வினாக்கள் :</u>**

i. மாற்றுத்திறனாளிகளிடம் அதிகமாகக் காணப்படுவது ......................
அ) நம்பிக்கை ஆ) கவலை இ) வேதனை ஈ ) மகிழ்ச்சி

ii. வெற்றி பெற எதனைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?
அ) தன்னம்பிக்கை ஆ) முயற்சி இ) சாதனை ஈ) கவலை

iii. ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற ஆண்டு ......................
அ) 1960 ஆ) 1860 இ)1690 ஈ) 1680

iv. வில்மா ருடால்ப் நடக்க இயலாத காரணம் ?
அ) நிமோனியா காய்ச்சல் ஆ) இளம்பிள்ளை வாதம்
இ) கால்முறிவு ஈ) மலேரியா காய்ச்சல்

v. வாழ்வில் எதனைக் கைவிடக்கூடாது?

அ) தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆ) நம்பிக்கை

இ) முயற்சி ஈ) உழைப்பு

## 12. நஞ்சு

மருத்துவத் தொழிலுக்கு பாம்பின் நஞ்சு மிக இன்றியமையாததாகும். இது பொன்னை விட மேன்மையானது. 140 கிராம் நஞ்சை எடுப்பதற்கு 20 ஆயிரம் பாம்புகள் தேவைப்படுகின்றன. பாம்பின் பல்லிலிருந்து நஞ்சைப் பிழிந்தெடுக்கின்றனர். இரஷ்யாவில் ஒரு கிராம் நஞ்சின் விலை 1400 ரூபிள். ஆனால் தங்கத்தின் விலையோ கிராமிற்கு மூன்று முதல் எட்டு ரூபிள் வரைதான். இதன் மூலம் பாம்பு நஞ்சின் மதிப்பு தெரியும். பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு கால்சியம் குளோரைடில் வைக்கப்படுகிறது. அது நீரை உறிஞ்சியபின் படிகங்களாக மருந்தாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. பாம்பு நஞ்சு தசை வலிகளையும் நரம்புக் கோளாறுகளையும் குணப்படுத்துகிறது. கேன்சர் நோய்க்கும் பாம்பின் நஞ்சு மருந்தாகப் பயன்படுகிறது.

**<u>வினாக்கள் :</u>**

i. தங்கத்தை விடச் சிறந்தது ......................

அ) வைரம் ஆ) பிளாட்டினம்

இ) கால்சியம் ஈ) பாம்பின் நஞ்சு

ii. ஒரு கிராம் நஞ்சின் விலை 1400 ரூபிள் என விற்கப்படும் நாடு ........................

அ) இந்தியா ஆ) ஜப்பான் இ) இரஷ்யா ஈ) இந்தோனேசியா

iii. பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு எதில் வைக்கப்படுகிறது?

அ) குளோரைடு கால்சியமில் ஆ) குளோரைடில்

இ) கால்சியம் ஈ) கால்சியம் குளோரைடில்

iv. பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு எவ்வாறு மருந்தாலைகளுக்கு அனுப்பப்படுகிறது?

அ) படிகங்களாக ஆ) கற்களாக

இ) நீரை உறிஞ்சியபின் ஈ) நீரை உறிஞ்சியபின் படிகங்களாக

v. பாம்பின் நஞ்சு எந்த நோயைப் குணமாக்க உதவுகிறது ?

அ) மலேரியா ஆ) காய்ச்சல் இ) மஞ்சள் காமாலை ஈ) புற்று நோய்

## 13. தமிழ் இலக்கியங்கள்

தாய்மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் உள்ளன. நமது மூதாதையர் நமக்கு குடிவழிச் சொத்தாக வைத்து விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்கள் இவை. இளமையிலிருந்தே, மனிதனாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் இலக்கிய நயமுணர்ந்து, சுவைத்தலின் அனுபவத்தால் உணரமுடியும். இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகள் யாவும் தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல் பயில் தோறும் புதுப்புது பொருள் சுரந்து இன்பம் ஊட்டும் ஊற்றுக்களாகும். இலக்கியங்களில் இலை மறை காய்களாக உவமைகள் உள்ளன. இலக்கியங்கள் நம்மை புதிய மனிதனாக மாற்றுகின்றன. வாழ்க்கையின் திறனாய்வுதான் இலக்கியம்.

**வினாக்கள் :-**

i. இலக்கிய நயமுணர்ந்து சுவைத்தலில் எப்போது ஈடுபட வேண்டும் ?
அ) இளமையில் ஆ) முதுமையில் இ) ஆர்வத்தில் ஈ) கற்றலில்

ii. எண்ணற்ற இலக்கியங்கள் உள்ள மொழி எது ?
அ) தமிழ்மொழி ஆ) தாய்மொழி இ) வடமொழி ஈ) மலையாளம்

iii. இலக்கிய படைப்புகள் எதற்கு உவமையாக்கப்பட்டள்ளது ?
அ) கேணி ஆ) திருக்குறள் இ) மணற்கேணி ஈ) சுவைக்கு

iv. இலக்கியங்களில் இலைமறை காய்களாக உள்ளவை எவை?
அ) நீதி ஆ) இலக்கணம் இ) உவமை ஈ) விளையாட்டுக்கள்

v. இலக்கியங்கள் என்பன?
அ) நூல்கள் ஆ) உரிமை இ) சொத்து ஈ) நுண்ணறிவு

## 14.பாரதியார்

சுப்ரமணிய பாரதியார் அவர்கள், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன். அவருடைய 5 வயதில் அவருடைய தாயார் காலமானார். இவர் இளம் வயதிலேயே தமிழில் புலமைப்பெற்றுத் திகழ்ந்தார். ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார். இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு “பாரதி” என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் “சுப்பிரமணிய பாரதியார்” என அழைக்கப்பெற்றார். 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு சிறிது காலம் காசிக்கு சென்று தங்கியிருந்தார். ‘மீசை கவிஞன்’ என்றும் ‘முண்டாசு கவிஞன்’ என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், தாய் மொழியாம் தமிழ்

மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராக திகழ்ந்தார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனி புலமைப்பெற்று விளங்கினார். 1912 ஆம் ஆண்டு கீதையை தமிழில் மொழிப்பெயர்த்தார். 'கண்ணன்பாட்டு', 'குயில்பாட்டு', 'பாஞ்சாலி சபதம்',' புதிய ஆத்திச்சூடி' போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப் பெற்றன.

**வினாக்கள்**

i. பாரதியார் பிறந்த வருடம் ___________.

அ) 1897　　ஆ) 1882　　இ) 1912　　ஈ) 2000

ii. "பாரதி" என்ற பட்டத்தை வழங்கியவர் _______________

அ) எட்டய புரம் மன்னர்　　ஆ) தந்தையார்　　இ) செல்லம்மா　　ஈ) சுப்பிரமணியன்

iii. 1912ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்ட நூல்

அ) கண்ணன்பாட்டு　　ஆ) குயில்பாட்டு　　இ) புதிய ஆத்திச்சூடி　　ஈ) கீதை

iv. பாரதியார் தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு சிறிது காலம் எங்கு சென்று தங்கியிருந்தார்?

அ) சென்னை　　ஆ) காசி　　இ) மும்பை　　ஈ) மதுரை

v. 'மீசை கவிஞன்', 'முண்டாசு கவிஞன்' என்றெல்லாம் புகழப்பட்டவர்

அ) கவிமணி　　ஆ) பாரதிதாசன்　　இ) பாரதியார்　　ஈ) வள்ளுவர்

## 15. புலிகள்

ஊன் உண்ணும் விலங்குகளில் கவர்ச்சியும், கம்பீரமும் மிகுந்த புலி இந்தியாவின் தேசிய விலங்கு ஆகும். 1972 ல் புலி இந்தியாவின் தேசிய விலங்காக தேர்ந்தெடுக்கப் பட்டது. தேசிய விலங்கை கொல்வது சட்டப்படி குற்றம் ஆகும். எனவே அவற்றை பாதுகாக்க வேண்டும். 2001 ல் புலிகளின் எண்ணிக்கை 3642 ஆக இருந்தது. ஆனால் இப்போது 1411 ஆக குறைந்துள்ளது. 1973ல் தொடங்கப் பட்ட புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஒரு முழுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டமாகும்.

**வினாக்கள்**

i. இந்தியாவின் தேசிய விலங்கு எது?

அ) சிங்கம்　　ஆ) புலி　　இ) யானை　　ஈ) சிறுத்தை

ii. தேசிய விலங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு

அ) 1972 ஆ) 1973 இ) 2001 ஈ) 1970

iii. 2001 ல் புலிகளின் எண்ணிக்கை

அ) 2000 ஆ) 1411 இ) 3642 ஈ) 1972

iv. புலிகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப் பட்ட ஆண்டு

அ) 1972 ஆ) 1973 இ) 2001 ஈ) 1970

v. புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஒரு ________________________ திட்டமாகும்.

அ) காடுகள் பாதுகாப்புத் திட்டம் ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டம்

இ) மரம் வளர்ப்புத் திட்டமாகும் ஈ) நீர் பாதுகாப்புத் திட்டமாகும்

## 16. மதுரகவி பாஸ்கரதாஸ்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் “வந்தேமாதரம்” என்னும் சொல்லைக் கேட்டால் ஆங்கிலேயர்களுக்குக் காதில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது. ஆனால் மண்ணின் மக்களுக்கோ அதுவே உயிர்மூச்சாக இருந்தது. இச்சொல்லை உதடுகளால் உச்சரித்தாலே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் நாடகமேடைகளில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக எழுதியும் பாடியும் வந்தவர் மதுரகவி பாஸ்கரதாஸ். அன்றைய நாட்களில் அவரது பாடல்களை மேடைகளில் பாடாத நடிகரோ நடிகையரோ இல்லை. வள்ளி திருமணத்திற்கு அவர் எழுதிய

**“வெட்கம் கெட்ட வெள்ளைக் கொக்குகளா**

**விரட்டி அடித்தாலும் வாரிகளா”** - என்னும் பாடல் பட்டிதொட்டியெல்லாம் பாடப்பட்டது.

வெள்ளைச்சாமி என்னும் இயற்பெயர் கொண்ட இவர் மதுரகவி பாஸ்கரதாஸ் ஆனது இராமநாதபுரத்தை ஆண்ட பாஸ்கர சேதுபதியின் நட்பினால்தான். நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய வள்ளல் பாண்டித்துரையாருக்கு உறுதுணையாக இருந்த பாஸ்கரசேதுபதி வெள்ளைச்சாமியின் கவியாற்றலைக் கண்டு வியந்து ”முத்தமிழ் சேத்திர மதுர பாஸ்கர தாஸ்” என்னும் பட்டப் பெயரைச் சூட்டினார். பல நாடகசபாக்களுக்கு நாடகங்களும் பாடல்களும் இவர் எழுதிக் கொடுத்துள்ளார். அக்காலத்திலேயே ஐநூற்றுக்கும் மேற்பட்ட இவரது பாடல்கள் இசைத்தட்டுகளாக வெளியாயின. அவற்றுள் பெரும்பாலானவை தேசப்பக்திப்பாடல்கள். நாடக உலகில் கொடிகட்டிப்

பறந்த பாஸ்கரதாஸ் திரை உலகிலும் சாதனை புரிந்துள்ளார். காளிதாஸ் முதலான பல படங்களுக்குப் பாடல்களை எழுதியுள்ளார்.

**வினாக்கள்**

i. வந்தேமாதரம் என்ற சொல்லால் ஆத்திரம் அடைந்தவர் .........

அ) பாஸ்கரதாஸ் ஆ) வெள்ளையர் இ) இந்தியர் ஈ) பாஸ்கர சேதுபதி

ii. வெட்கம் கெட்ட வெள்ளைக் கொக்குகளா
விரட்டி அடித்தாலும் வாரிகளா" - என்னும் பாடல் அடிகளில் வெள்ளைக் கொக்கு என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது?.

அ) பாண்டித்துரையார் ஆ) சேதுபதி இ) பாஸ்கரதாஸ் ஈ) ஆங்கிலேயர்

iii. பாஸ்கர தாசுக்குப் பெற்றோர் இட்ட பெயர் .................................

அ) பாஸ்கர சேதுபதி ஆ) வெள்ளைச்சாமி இ) மதுரகவி ஈ) பாஸ்கரதாஸ்

iv. நாடக உலகில் கொடிகட்டிப் பறந்தார் பாஸ்கரதாஸ். – இதொடரில் கொடிகட்டிப் பறந்தார் என்னும் தொடர் உணர்த்தும் பொருள்

அ) விரைந்து செயல்பட்டார் ஆ) ஓய்வின்றி உழைத்தார்

இ) சிறந்து விளங்கினார் ஈ) கொடிகள் கட்டினார்.

v. நான்காம் தமிழ்ச்சங்கத்தை உருவாக்கியவர் ..................................

அ) சேதுபதி ஆ) பாண்டித்துரையார் இ) பாஸ்கரசேதுபதி ஈ) வெள்ளைச்சாமி

## 17. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

நாம் வாழும் பூமியில் நிலம், நீர், காற்று, முதலிய இயற்பியல் காரணிகளுக்கும் தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் போன்ற உயிரினக் காரணிகளுக்கும் இடையோன தொடர்பு சுற்றுச் சூழல் எனப்படுகிறது. இவற்றிற்கிடையேயான பிணைப்புகளில் பாதிப்புகள் ஏற்படும் போது சூழல் பாதிக்கப்படுகிறது. மனிதர்களும் விலங்குகளும் தாவரங்களையே சார்ந்து வாழ வேண்டியுள்ளது. மனிதன் விளைநிலங்களுக்காகக் காடுகளை அழிக்கிறான். குடியிருப்புகளுக்காக விளைநிலங்களை அழிக்கிறான். காடுகள் அழிக்கப்படுவதால் மழைப்பொழிவு குறைகிறது. வனவிலங்குகள் வாழ்விடங்களை இழந்து குடியிருப்புகளை நோக்கி வருகின்றன. இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுகிறது.

மக்காத திடக்கழிவுகள், ஆலைக்கழிவுகள், செயற்கை உரங்கள்,

களைக்கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றால் நிலம் மாசுபடுகிறது. நகர்ப்புறக்கழிவுநீர், ஆலைக்கழிவு நீர் நீர்நிலைகளுடன் கலப்பதால் நீர்மாசு ஏற்பட்டு நீர் வாழ் உயிரினங்கள் அழிகின்றன. தொழிச்சாலைப்புகையும் வாகனப்புகையும் வளிமண்டலத்தைப் பாழாக்குகின்றன. ஒலிபெருக்கிகள், வாகன ஒலிகள், ஜெட் விமானங்கள் போன்றவை ஒலிமாசு ஏற்கடக் காரணமாகின்றன. மக்காத திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல், இயற்கை வேளாண்மை, மரம் வளர்த்தல், கழிவு நீர் மேலாண்மை போன்றவற்றின் மூலம் சுற்றுச் சூழல் சீர் கேட்டினைத் தடுக்கலாம்.

**வினாக்கள்**

i. பின்னலாடை ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ........... மாசுபடுகிறது.

அ) நிலம் ஆ) காற்று இ) நீர் ஈ) ஒலி

ii. காற்றுமண்டல மாசுபாட்டைத் தடுப்பது .......................................

அ) வாகனப்புகை ஆ)தொழிற்சாலைப்புகை

இ) வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைப் புகை ஈ) மரங்கள்

iii. மக்காத திடக்கழிவுகளை ....................................... வேண்டும்.

அ) புதைக்க ஆ) எரித்துவிட

இ) மறுசுழற்சி செய்ய ஈ) அதிகமாகப்பயன்படுத்த

iv. இயற்கை வேளாண்மையால் ................................................

அ) நிலம் மாசுபடுகிறது ஆ) சூழல் காக்கப்படுகிறது

இ) சூழல் மாசுபடுகிறது ஈ) நீர் மாசுபடுகிறது.

v. வனவிலங்குகள் ஊருக்குள் வரக் காரணம் ----------------------

அ) காடுகள் அடத்தியாக வளர்வதால்

ஆ) காடுகளில் வாழப்பயம் கொள்வதால்

இ) மனிதர்கள் அன்படன் பழகுவதால்

ஈ) வனங்கள் அழிக்கப்படுவதால்